# Basic HTML Tags

HTML tag ஒரு programming languageல் உள்ள kewordsஐ போன்றது, இது பிரௌசர் எவ்வாறு ஒரு webpageஐ வடிவமைத்து காண்பிக்கும் என்பதை வரையறுக்கிறது. Tags browserக்கு சாதாரண மற்றும் HTML உள்ளடக்கத்தை வேறுபடுத்த உதவுகின்றன. HTML tags மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டிருக்கின்றன: opening tag, உள்ளடக்கம்(content) மற்றும் closing tag. ஆனால் சில HTML tagகளில் closing tag இருக்காது. ஒவ்வொரு HTML tagம் வெவ்வேறு பண்புகளைக் கொண்டுள்ளன.

*General Format*

```
<tagname> CONTENT </tagname>
```

*Example*

```
<b> Bold Tag </b>

<hr>
```

*General Format*

```
<!DOCTYPE html>
<html>
    <head>
        <title>First Web Page</title>
    </head>
    <body>
        <h1>Welcome</h1>
        <p>This is My First web page</p>
    </body>
</html>
```

ஒவ்வொரு HTML பக்கமும் இந்த இரண்டு tagகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. DOCTYPE
2. HTML

***DOCTYPE***

Web pageல் பயன்படுத்தப்படும் HTML versionஐ பற்றி browserக்குத் தெரிவிக்க இந்தக் குறிச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இது Document Type Definition(DTD) என அழைக்கப்படுகிறது. இது document வகையைப் பற்றிய browserக்கான ஒரு அறிவுறுத்தலாகும். இது ஒரு NULL tag, இதில் closing tag இருக்காது.

*General Format*

<!DOCTYPE html>

***HTML***

இது web page‌ன் root elementஆகும். வலைப்பக்கத்தின் அனைத்து elementகளும் HTML tagக்குள் கொடுக்கப்பட்டிருக்கும். இதில் head மற்றும் body ஆகிய இரண்டு முக்கியமான tagகள் உள்ளன.

***Head***

HTML tagல் உள்ளே இருக்கும் முதல் element இதுவாகும். இந்த element documentஐ பற்றிய தகவல்களைக் கொண்டிருக்கும். Title tag உள்ளடக்கத்தைத் தவிர, Head tagன் உள்ளடக்கம் webpageல் காட்டப்படாது. இது meta, style, link மற்றும் script tagகளைக் கொண்டிருக்கலாம்.

***Body***

BODY tag இணையப் பக்கத்தில் காட்டப்பட வேண்டிய elementsகளைக் கொண்டுள்ளது. ஒரு வலைப்பக்கத்தில் ஒரே ஒரு body tag மட்டுமே இருக்க முடியும். இதில் text content, paragraphs, headings, images, tables, links, videoக்கள் போன்றவை இருக்கலாம்.